முதல்வரின், 'நான் முதல்வன்' திட்டம் – 'புதுமைப் பெண்' திட்டம் – 'தமிழ்ப் புதல்வன்' திட்டங்களால் –

'திராவிட மாடல்' ஆட்சியில் உயர்கல்வி முதலிடம்!

சட்டப் பேரவையில் – உயர் கல்வித்துறை மானியக் கோரிக்கையில் – அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பதிலுரை!

சென்னை, ஏப்.27 –

சட்டப் பேரவையில் உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் முதல்வரின் நான் முதல்வன் – புதுமைப் பெண் திட்டம் – தமிழ்ப் புதல்வன் திட்டங்களால் – 'திராவிட மாடல்' ஆட்சியில் உயர்கல்வி முதலிடம் பிடித்துள்ளது என்று அமைச்சர் கோவி. செழியன் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் கோவி. செழியன் பதிலுரை வருமாறு:

பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஈரோட்டு பூகம்பம் (குறுக்கீடு) வெண்தாடி வேந்தர் (குறுக்கீடு) பகுத்தறிவு சூரியன், (குறுக்கீடு) ஆணாக பிறந்தாலும் (மேசையைத் தட்டும் ஒலி) பெண் உரிமைக்காக போராடிய போராளி. (மேசையைத் தட்டும் ஒலி) செல்வ குடும்பத்தில் பிறந்து.

ஏழை மக்களுக்கு உழைத்த உத்தம தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) ஏன்? எதற்கு? எப்படி? என கேள்வி கேள் என்ற அறிவு ஆசான். நான் பேசுவதை அப்படியே ஏற்றுக்கொள்ளாதீர்கள், உங்கள் பகுத்தறிவுக்கு எது சரியானதோ அதை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்ன பகுத்தறிவு பகலவன் ஈரோட்டு பூகம்பம் தந்தை பெரியாரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காஞ்சியின் மன்னன், ஏழையெளிய மக்களின் அண்ணன், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை கற்றுத்தந்த தாரக மந்திரம். இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்று உரைத்த எங்கள் ஆசான். தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்று என்று மார்த்தட்டிய பேராசான். பேசி, பேசி மக்களை கவர்ந்த தலைவர், அடுக்குமொழிப் பேசி அகிலம் ஆண்ட தமிழர். உள்ளது உள்ளபடி சொல்ல வேண்டுமேயானால் பேசி, பேசி ஒரு நாட்டை ஆள முடியும் என்பதை உலகிற்கு காட்டிய உத்தமத் தலைவர் பேரறிஞர் அண்ணாவை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர், மூதறிஞர் நாடுபோற்றும் நற்றமிழறிஞர்.

தமிழர்களே, தமிழர்களே என்னை நீங்கள் கடலில் தூக்கி எறிந்தாலும், கட்டுமரமாக தான் மிதப்பேன், தமிழர்களே, தமிழர்களே என்னை நீங்கள் தூக்கி எறிந்தாலும் கட்டுமரமாக மிதப்பேன், நீங்கள் ஏறி சவாரி செய்யலாம் கவிழ்ந்துவிட மாட்டேன் என்று நம்பிக்கை ஊட்டிய தலைவர்.

மன்னார்குடியில் அண்ணா அவர்கள் பேசுகிறார், கலைஞர் அவர்கள் மேடை ஏறுகிறார், அப்போது 'முன்பாதியை நான் எழுதி விட்டேன், பின்பாதியை என் தம்பி கலைஞர் எழுதுவார்' என்று அண்ணா அவர்கள் அடையாளம் காட்டிய அற்புதத் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) 'நான் சொல்வதைச் செய்கிற தம்பிமார்கள் ஆயிரக்கணக்கில் எனக்கு உண்டு; நான் சொல்வதைச் செய்கிற தம்பிமார்கள் ஆயிரக்கணக்கில் எனக்கு உண்டு. ஆனால், நான் நினைப்பதைச் செய்கிற ஒரே தம்பி' என்று அண்ணா அவர்கள் சொன்ன வார்த்தையை இந்த அவையில் சொல்ல, மன்னிக்க வேண்டும், முதல்வர் அவர்களே, மன்னிக்க வேண்டும். 'நான் சொல்வதைச் செய்கிற தம்பிமார்கள் ஆயிரக்கணக்கில் எனக்கு உண்டு. நான் நினைப்பதைச் செய்கிற ஒரே தம்பி கருணாநிதி' என்று அண்ணாவால் பாராட்டப்பெற்ற அற்புதத் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) தன்னிகரில்லாத தமிழினத்தின் தலைவர், அன்புத் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெரியார் – அண்ணா – கலைஞராய் எங்களுக்கு கிடைத்த காவல் அரண்!

பெரியாராய், அண்ணாவாய், கலைஞராய் எங்களுக்குக் கிடைத்திட்ட எங்கள் காவல் அரண், கழகத்தின் தலைவர், தமிழகத்தின் முதல்வர், நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் 40–க்கு 40 வென்றுகாட்டி, 100–க்கு 100 மதிப்பெண் பெற்ற தேசத் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றிய அரசு என்ற ஒற்றை வார்த்தையில் இந்தியாவை உற்றுநோக்க வைத்தார். அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்றார்கள். இன்றைக்கு பலரும் ஒன்றிய அரசு என்று உச்சரிக்கிறார்கள் என்று சொன்னால், அவ்வாறு உச்சரிக்க காரணமாக இருந்த பிதாமகன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, 'தை' எப்படியோ, 'பை' எப்படியோ, 'பூ' எப்படியோ ஒரெழுத்து அர்த்தங்களாயினும், 'பூ'–வைப்போல், 'பை'–யைப்போல், 'தை'–யைப்போல் இந்த நிதிநிலை அறிக்கையில் 'ரூ' என்ற ஒற்றை வார்த்தையை உருவாக்கிய இந்தியாவின் Political vibration. இந்தியாவின் அதிர்வு சக்தி. (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய ஆளுமையில் இருக்கும் முக்கிய தலைவர் அய்யா சந்திரபாபு நாயுடு அவர்கள். கலைவாணர் அரங்கில் கலைஞர் அவர்களை வைத்துக்கொண்டு சொன்னார், இங்கிருக்கிற அமைச்சர்கள் அனைவரும் கலைஞர் அவர்களை தலைவர், தலைவர் என்று சொல்கிறீர்கள். ஆந்திராவின் முதலமைச்சராக நான் வந்திருக்கிறேன், நானே சொல்கிறேன் எனக்கும் சேர்த்து தலைவர், கலைஞர் என்று சொன்ன அதே அய்யா சந்திரபாபு நாயுடு அவர்கள், முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இருமொழிக் கொள்கையில், மொழியைக் காக்கும் கொள்கையில், டெல்லியிலும் சொன்னார், தன்னுடைய சொந்த மாநிலத்திலும் சொன்னார், மொழியைக் காப்பதில் நான் பின்பற்றுகிற மாநிலம் தமிழ்நாடு, ஏற்றுக்கொண்ட முதல்வர், தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மொழி காக்கிற வீரனாக இருக்கிற எங்கள் தமிழ் புதல்வரே! தமிழ் மகனே! எங்கள் தலைவரே! உங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஓயாமல் உழைக்கிற இளந்தலைவராய், ஐந்தாம் தலைமுறையின் கலை மகனாய்; முதலமைச்சரின் வீரப்பிள்ளையாய்; முத்தமிழறிஞரின் பேரப்பிள்ளையாய்; இன்றைய அன்பகமாய்; நாளைய அறிவகமாய், ஒற்றைக் கல்லைக் கையில் வைத்து பாராளுமன்றத்தில் தனித்து majority–ஐ தடுத்து நிறுத்திய காவல் அரண், மதச்சார்பற்ற அணியின் இளந்தலைவர். தலையைச் சீவினால் பத்து கோடி தருவோம் என்றார்கள், சிரித்துக்கொண்டே சொன்னார், என் தலையைச் சீவ எதற்கு பத்து கோடி, பத்து ரூபாய் சீப்பு இருந்தால் போதும், சீவிக் கொள்வேன் என்று சொல்லி அரசியலில் அதிர்வுகளை உருவாக்கிய இளந்தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களை இயக்குகிற தலைவர், துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்நெஞ்சக்காரர்கள் வெற்றியைப் பறித்திட உங்கள் நெஞ்சில் கை வைத்துத் தள்ளினார்கள். கல்நெஞ்சக்காரர்கள் வெற்றியைப் பறித்திட உங்கள் நெஞ்சில் கை வைத்துத் தள்ளினார்கள் அன்று. முதலமைச்சர் அவர்களின் பார்வையில், நீங்கள் இன்று வணங்கும் உயர்த்தில் இருக்கிறீர்கள், வணங்குகிறேன் பேரவைத் தலைவர் அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி)

அவை முன்னவர் அவர்கள், மூத்த அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், முன் வரிசையில் இருக்கிற முன் வரிசைத் தலைவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், ஜனநாயகத்தின் தூண்களாக நாங்கள் என்றைக்கும் மதிக்கிற, போற்றுகிற பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்த அன்புத் தோழர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வணக்கத்தை மீண்டும், மீண்டும் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முரசொலி செல்வம் சிலை திறப்பு!

அன்புத் தலைவர் கலைஞர் அவர்களின் முதல் குழந்தை, முரசொலி. இன்றைய செய்தி நாளைய வரலாறு என்று எழுதி காட்டிய தலைவர். நேற்று மாலை, முரசொலியில், அண்ணன் முரசொலி செல்வம் அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

முரசொலியில் எழுதுகிற ஒவ்வொரு வாசகமும் இந்திய அரசமைப்புச் சட்டத்தை, மதச் சார்பற்ற கொள்கையைப் பாதுகாக்கிற அரண்.

அண்ணன் முரசொளி மாறன் அவர்கள் மறைந்தபொழுது கவியரசு வைரமுத்து எழுதினார் எல்லோருக்கும் தாய்மாமன் உண்டு. ஆனால், உனக்கு மாமனே தாய் ஆன வரலாறு கலைஞர் வரலாறு உன் வரலாறு என்று எழுதினார். அவருடைய தம்பி முரசொளி செல்வம் இதே சபையில் பத்திரிக்கை உரிமையை மீறினார் என்பதற்கு தனி கூண்டு வைத்து அவரை குற்றம் சுமத்தி சிறையில் அடைக்க முற்பித்தார்கள். அந்த சர்வாதிகாரத்தை உடைத்து எறிந்தார் அண்ணன் முரசொளி செல்வம். அன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் எழுதினார் கூண்டு கண்டேன் குதூகலம் கொண்டேன். என்னுடைய மகளுக்கு உன்னை திருமணம் முடித்த நாளைவிட, இன்றைக்கு நான் மகிழுகிற திருநாள் நீ கூண்டில் நின்ற காட்சி என்று எழுதினார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் மறைந்தபொழுது இதே தலைவர் எழுதினார் தமிழ்நாடு முதலமைச்சர், நான் சாய்ந்து கொள்கிற ஒரு சாய்வு மரமாக இருந்த தூண் பரிபோய்விட்டதே என்று. எனவே அப்பேர்பட்ட அண்ணன் முரசொளி செல்வம் அவர்களையும் இந்த நேரத்தில் நினைவு கூர்ந்து, கலைவானர் சிலை திறப்பு விழாவில் கலைஞர் சொன்னார், அதில் கண்ணதாசன் அவர்களும் கலந்துகொண்டார். கவியரசு கண்ணதாசன் அவர்கள் சொன்னார் பிறக்கிற காலத்தில் யார் வேண்டுமானாலும் யார் காலத்திலும் பிறக்கட்டும், ஆனால் இறக்கக் கூடியவர்கள் கலைஞர் காலத்தில்தான் இறக்க வேண்டும் இறவாப் புகழ் அடையவேண்டும் என்று கவியரசர் கண்ணதாசன் சொன்னார். கலைவானர் சிலை திறப்பு விழா ஒரு வருட காலத்தில் கண்ணதாசன் மறைகிறார். கலைவானர் அரங்கத்தில் கலைஞர் அவர்கள் பேசும்போது சொன்னார், பிறப்பவர்கள் யார் காலத்திலும் பிறக்கட்டும், இறப்பவர்கள் என் காலத்தில் இறக்கட்டும் என்று சொன்னாயே கண்ணதாசா! கலைவானர் சிலை திறப்பு விழாவில் சொன்னாயே, யார் அழைத்தாலும் செல்வாயே கண்ணதாசா எமன் அழைக்கிறான் என தெரியாமலா போய்சேர்ந்தாய்? என்று கண்ணதாசனுடைய மறைவுக்கும் இறங்கல் கணை எழுதிய தலைவர். இதை எதற்காக சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால் தமிழக முதல்வர் அவர்களே, பிறப்பவர்கள் யார் காலத்திலும் பிறக்கட்டும். ஆனால், இறப்பவர்கள் உன் காலத்தில் இறந்தால், இறவாப் புகழ் உண்டு என்பதற்கு அடையாளம் சமூக நீதி காவலர் வி.பி. சிங் அவர்களுக்கு சிலை திறந்தீர். ஜனநாயக பத்திரிக்கை காவலர் முரசொளி செல்வத்திற்கு சிலை திறந்தீர். எனவே, கண்ணீர் வடித்துக் கேட்கிறேன். பிறப்பவர்கள் யார் காலத்திலும் பிறக்க வேண்டும். இறப்பவர்கள் உன் காலத்தில் இறக்க வேண்டும். அந்த இறவாப் புகழ் இந்த ஏழையெளிய தொண்டன் கோவி. செழியனுக்கும் கிடைக்க வேண்டும். உன் கண்ணீர் துளி என் உடலில் பட வேண்டும். இது வாழ்நாள் சரித்திரம் வாழ்நாள் பாக்கியம்.

பல பல்கலைக்கழகங்கள் கண்ட கலைஞருக்கு ஒரு பல்கலைக் கழகம்!

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஐந்தாவது முறையாக பட்ஜெட் தாக்கல் செய்கிறேன் என்று சொன்னார். எங்கள் அவை முன்னவரை சொன்னால் பல ஆண்டுகள் சொல்லுவார். அடுத்த அமைச்சரை சொன்னால் இன்னும் பல ஆண்டுகள் சொல்லுவார். முன்வரிசை தவைர்கள் பட்ஜெட் படிப்பதற்கு பல ஆண்டுகள் உண்டு. இளையவர்களுக்கு 5 ஆண்டுகள் இருந்தது. ஆனால், இந்த எளியவன் கோவி. செழியன், இன்றைக்கு உயர் கல்வித் துறை மானிய கோரிக்கைக்கு பதில் அளிக்கிறேன் என்று சொன்னால், எந்த சமூகத்திற்கு கல்வி மறுக்கப்பட்டதோ கல்வி கூடாது என்றார்களோ, நிழலுக்குகூட ஒதுங்கக்கூடாது என்று சொன்னார்களோ அண்ணல் அம்பேத்கர் படித்த பள்ளியை துச்சம் என கருதி பள்ளியிலிருந்து தூக்கி எறிந்தார்களோ ஆதி காலத்தில் கற்றலும் கற்பித்தலும் அவன் தொழில். எவன் தொழில்? கோடிட்ட இடத்தை நிரப்புக அவையில் சொல்வது அர்தமில்லை. கற்றலும் கற்பித்தலும் அவன் தொழில். ஒருவேளை காதின் ஓசை–சூத்திரன் காதில், ஆதி திராவிடன் காதில் பட்டுவிட்டால், அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊத்த வேண்டும் என்று சொன்ன சமூகம், இதே தமிழகத்தில் 70, 80 ஆண்டுகளுக்கு முன்னால் இந்திய அரசமைப்பு சட்டம் வருவதற்கு முன்னால், மனு ஸ்மிருதி, மனு தர்மம் இந்த நாட்டை ஆண்டபோது.

எந்த சமூகத்திற்கு கல்வி இல்லை என்றார்களோ, எந்த சமூகத்தின் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊத்து என்றார்களோ அந்த சமூகத்தில் பிறந்த, ஓலை குடிசையில் பிறந்த ஏழைத் தொண்டனை கோவி. செழியனை, உயர் கல்வித் துறை அமைச்சர் என்று சொல்கின்ற ஒரு பெருமையை இந்த தொண்டனுக்கு இந்திய திருநாட்டில் எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனையை உருவாக்கிக் காட்டியத் தலைவன் நீங்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுடைய பல்கலைக்கழகம் நேற்று அறிவித்தீர்கள். எல்லோரும் பாராட்டினார்கள் வாழ்த்தினார்கள். நான் என்னவோ உயர் கல்வித் துறை அமைச்சர் ஆன காரணத்தால் கும்பகோணத்தில் நான் கேட்டதால் என்று. நான் பல முறை கேட்டேன் மறுத்தீர்கள். எங்கள் மூத்த அமைச்சர்கள் கேட்டார்கள் மறுத்தீர்கள். பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்மூலம் துணை முதலமைச்சர் அவர்களையும் நேரில் சென்றும் கேட்டேன் கிடைப்பதற்கான அறிகுறி தெரியவில்லை.

கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் எனக்கு இருந்தது. பல பல்கலைக்கழங்களைக் கண்ட, பல்கலைக்கழகத்தை உருவாக்கிய தலைவருக்கு ஒரு பல்கலைகழகம் இல்லையே என்ற ஏக்கம் என் நெஞ்சில் நின்றது. முன்வரிசை தலைவர்களை அணுகினேன், தலைவா உன் அனுமதி இல்லாமல்தான், மன்னிக்க வேண்டும். கற்பூரத்தைப்போல் பற்றிக் கொண்டார்கள் முன்வரிசை தலைவர்கள். அதன் விளைவு, நீங்கள் மறுத்தாலும், அந்தத் தலைவனுக்கு வைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்த முன்வரிசை தலைவர்களுக்கும், மாற்று இயக்க தலைவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை, பாராட்டுகளை, வாழ்த்துகளை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் என்றால், ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் என்றால், அவன் மண்டையில் இருப்பது என்ன தங்கத்தால் ஆன மூளையா? இவன் மண்டையில் இருப்பது என்ன களிமண்ணா, சுண்ணாம்பா? என்று கேட்டத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். உயர் கல்வியில் நீங்கள் செய்த சாதனை, நான் முதல்வன் திட்டத்தில் நீங்கள் படைத்திட்ட அற்புத சாதனை. கோவணம் மட்டுமே கட்டிக்கொண்டிருந்தவனுடைய பேரன், இன்று அரசு அலுவலகங்களில் அதிகாரி; வயலில் நாற்று நட்டுக்கொண்டிருந்தவனுடைய மகள், இன்றைக்கு மருத்துவக் கல்லூரி மாணவி; மழைக்கு ஒதுங்கும் குடிசையில் பிறந்தவள், இன்றைக்கு ஊரில் பெரிய Civil Engineer; சாக்கடை அள்ளியவன் வீட்டு பிள்ளை, இன்றைக்கு நகராட்சி ஆணையர்; சாக்கடை அள்ளியவன் வீட்டு பிள்ளை, இன்றைக்கு நகராட்சி ஆணையர்; பேனா பிடித்து எழுதத் தெரியாத பெற்றோருக்கு பிறந்தவன், இன்றைக்கு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர்; பேனா பிடித்து எழுதத் தெரியாதவர்களுக்கு பிறந்த பிள்ளை, இன்றைக்கு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்; கோயிலில் நுழையக் கூடாத ஜாதியில் பிறந்தவன், இன்று இந்து சமய அறநிலையத் துறையின் அதிகாரி; ஜமீன்தார் வீட்டு தோட்டத்து வேலைக்காரன் மகன் இன்றைக்கு ஜில்லா கலெக்டர்; பேருந்து வசதி இல்லாத ஊரில் பிறந்தவன், இன்று போக்குவரத்து ஆய்வாளர். யாரால்! யாரால்! யாரால்! உயர் ஜாதியினர் முன்பு நிமிர்ந்து நிற்க முடியாத ஜாதியில் பிறந்தவன், இன்று மிடுக்காக நிற்கும் போலீஸ் அதிகாரி; ஏடெடுத்து படிக்கத் தெரியாதவன் வீட்டு பிள்ளை, இன்று IT துறையில், அமெரிக்காவில். இவை அனைத்தும் எல்லோருடையது. எல்லோர் வாழ்விலும் உதவியவர், உதவுபவர், உதவிக்கொண்டிருப்பவர் தமிழக முதல்வரே, உங்களைத் தவிர வேறு யாரை நான் இந்த நேரத்தில் சொல்லிவிட முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

உயர்கல்வித் துறைக்கு 5 ஆண்டுகளில் 35 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கிய முதல்வர்!

அன்புத் தலைவர் கலைஞர் அவர்களை, பல்கலைக்கழகத்தினுடைய முதல்வர் அவர்களை, மாநில உரிமைக்கு போராடினார் என்ற பாராட்டு இந்தப் பேரவையில் கிடைத்தது. இதே நாளில்தான் 1922 ஆம் ஆண்டு துணைவேந்தர் நியமிக்கின்ற அதிகாரத்தை ஆளுநருக்கு வழங்காமல் முதல்வருக்கு வழங்க வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றித் தந்தோம். காலங்கள் உருண்டோடியது. தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்று சொன்ன அதே தலைவர் வென்று காட்டியிருக்கிறார். இன்றைக்கு துணைவேந்தர் நியமிக்கின்ற அதிகாரம் முழுவதும் அனைத்து மாநிலத்திற்கும் அந்தந்த மாநில முதலமைச்சரே என்று பச்சை மை பேனாவால் கையெழுத்து போடுவதற்கு உத்தரவு பெற்ற எங்கள் முதல்வரே! (மேசையைத் தட்டும் ஒலி)

உங்களுக்கு வாழ்த்துச் சொல்ல, பாராட்ட தமிழகத்தில் இருக்கிற மாணவர்கள், கல்வியாளர்கள், கல்வி சான்றோர்கள், பல்கலைக்கழகத்தின் வேந்தர்கள், முதல்வர்கள், தனியார் பள்ளி கூட்டமைப்பினுடைய நிர்வாகத்தினர் அனைவரும் ஒன்றுகூடி, பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலும், என்னிடத்திலும், பலரிடத்திலும், முதல்வர் அவர்களைப் பாராட்ட வேண்டும், அவர் சம்மதம் பெற்று தாருங்கள் என்று கேட்டார்கள். மறுத்த நீங்கள், மீண்டும், மீண்டும் அந்த அமைப்பினர் கேட்ட காரணத்தால் அனுமதித்தீர்கள். நம்முடைய அன்புத் தலைவர் தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு பாராட்டு விழா நடத்துகிற அந்த அறிவிப்பை, பேரவைத் தலைவர் அவர்களே உங்கள் வாயிலாக, இந்த அவைக்கும், இந்த அகிலத்திற்கும் நான் அறிவிக்க உங்கள் அனுமதியை கோருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில சுயாட்சி நாயகருக்கு பாராட்டு விழா!

மாநில சுயாட்சி நாயகருக்கு மகத்தான பாராட்டு விழா. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பினைப் பெற்றுத்தந்து, தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கான உரிமையை நிலைநாட்டியுள்ளார். இதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டு விழா நடத்திவிட வேண்டுமென தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களினுடைய வேந்தர்கள், துணை வேந்தர்கள், கல்வியாளர்கள், பேராசிரியர்கள், கல்லூரிகளினுடைய கூட்டமைப்பினர், கல்லூரி மாணவர்கள் விருப்பம் தெரிவித்திருந்தனர்.

இதை முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தபோது அவர்களும் இந்த விழாவில் கலந்து கொள்ள இசைவு அளித்துள்ளார்கள். எனவே, பேரவை உறுப்பினர்களே, உங்களையும் அழைக்கிறேன். இந்த உலகில் உள்ள தமிழர்களையும் அழைக்கிறேன். இந்த முதல்வருக்கு பாராட்டு தெரிவிக்க வரும் மே மாதம் 3 ஆம் தேதி மாலை 4 மணிக்கு சென்னையில் உள்ள நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் இந்த பாராட்டு விழா நடைபெற உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் உள்ள அனைத்து அமைச்சர் பெருமக்களும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அந்த விழாவில் பங்கேற்று மாநில சுயாட்சி நாயகருக்கு மகத்தான பாராட்டு விழா நடக்க அனைவரும் கலந்துகொள்ள வேண்டுமென்ற அறிவிப்பையும் இந்த அவையிலே, பேரவைத் தலைவர் அவர்களே உங்கள் வாயிலாக அறிவிக்க விரும்புகிறேன்.

இங்கே உயர் கல்வி மற்றும் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் முன்னாள் மூத்த அமைச்சர் பெருமக்கள் அந்தத் துறையில் வல்லமை வாய்ந்தவர்கள் அருமை உறுப்பினர் கே.ஏ. செங்கோட்டையன் அவர்களும், உறுப்பினர் கே.பி. அன்பழகன் அவர்களும், அவர்களைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்கள் உறுப்பினர் வெற்றிஅழகன், உறுப்பினர் ஆர்.டி. சேகர், உறுப்பினர் தி. ராமச்சந்திரன், மூத்த முன்வரிசைத் தலைவர் ஐயா உறுப்பினர் ஜி.கே. மணி, உறுப்பினர் மு. பாபு, அருமைச் சகோதரர் சட்டமன்ற அனுபவமிக்க உறுப்பினர் தி. வேல்முருகன், உறுப்பினர் கடலூர் கோ. ஐயப்பன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கையில் பேசினார்கள்; எனக்கு கோரிக்கை வைத்தார்கள். கோரிக்கையை ஏற்று முதல்வர் அவரகளிடம் சொல்லி, நிதி பெற வேண்டுமேயானால் பல்லாயிரம் கோடி ரூபாய் தேவை. நிதிச் சுமை நமக்குத் தெரியும். ஆனால், உயர் கல்விக்கு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு 8,494.10 இலட்சம் ரூபாய், அதாவது, 8,500 கோடி ரூபாயை உயர் கல்விக்குத் தந்த முதல்வர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வண்ணத் தொலைக் காட்சி வழங்கிய கலைஞர் !

அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சரானபோது, தேர்தல் நேரத்தில் நான் ஆட்சி பொறுப்பேற்றால் வண்ணத் தொலைக் காட்சி தருவேன் என்று சொன்னார். கோட்டைக்கு வந்தார்; அதிகாரிகள் வந்தார்கள்; நிதித் துறைச் செயலாளர் வந்தார்; நிதிச் சுமை எவ்வளவு இருக்கிறது என்று கேட்டார்கள். வண்ணத் தொலைக்காட்சிகள் கொடுக்கக்கூடிய வகையில் நிதி இல்லை, காலதாமதம் ஆகும் என்று அதிகாரிகள் சொன்னார்கள். வாடி சுணங்கிய முகத்தோடு கலைஞர் அவர்கள் சொன்னார், கஜானா காலியாக இருக்கலாம்; கரூவூலம் காலியாக இருக்கலாம்; களஞ்சியம் காலியாக இருக்கலாம்; என் மூளை காலி இல்லை என்பதை நாட்டிற்கு காட்டி வண்ணத் தொலைக் காட்சி வழங்கிய தலைவர் நம்முடைய முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டது. நிதி இடர்பாடு உண்டு. மைய அரசு கைவிரித்தது. இல்லை என்று சொல்லும் மனம் இல்லாத குணம் படைத்த தலைவர் 8,500 கோடி ரூபாயை உயர் கல்விக்கு வழங்கினார்கள் என்று சொன்னால், எனக்கு இரு கண்கள், ஒன்று மருத்துவம், மற்றொன்று கல்வி என்று சொன்ன அந்த தலைவர் அள்ளி வழங்கியதற்கு இந்தநேரத்தில் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 10 ஆண்டுகளில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் அவர்கள் ஒதுக்கிய ஒட்டுமொத்த நிதி 36,785 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 37 ஆயிரம் கோடி ரூபாய். கழக அரசு அமைந்ததற்குப் பிறகு, இந்த 5 ஆண்டுகளில் தளபதி அவர்களின் அனுமதியோடு உயர் கல்வித் துறைக்கு வழங்கப்பட்ட நிதி 34,710 கோடி ரூபாய். அதாவது 35 ஆயிரம் கோடி ரூபாய். மீண்டும் சொல்கிறேன். 10 ஆண்டுகளில் 37 ஆயிரம் கோடி ரூபாய். இந்த 5 ஆண்டுகளில் 35 ஆயிரம் கோடி ரூபாய், உயர் கல்வித் துறைக்கு முதல்வர் அவர்கள் ஒதுக்கித் தந்த நிதி. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியில் கல்லூரிகள் 40, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் 19 ஆக மொத்தம் 59 கல்லூரிகள். ஆனால், இந்த 5 ஆண்டுகளில் 21 கல்லூரிகள், கூட்டுறவுத் துறையில் 1 கல்லூரி, அண்ணன் பி.கே. சேகர் பாபு அவர்கள் அமைச்சராக இருக்கிற இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையில் 4 கல்லூரிகள், இந்த ஆண்டு 11 கல்லூரிகள் என்று 37 கல்லூரிகளை இந்த அரசு திறந்திருக்கிறது என்று சொன்னால், நிதிச் சுமையிலும் புதிய கல்லூரிகளை தந்த முதல்வர் நீங்கள்தான்.

மாணவர்களின் சேர்க்கை அதிகரிப்பு!

நான் முதல்வன் திட்டமும், புதுமைப் பெண் திட்டமும், தமிழ்ப் புதல்வன் திட்டமும் இன்றைக்கு மாணவர்கள் சேர்க்கையை அதிகரித்திருக்கிறது. இந்தியாவில் அதிகம் பயிலுபவர்கள் எந்த மாநிலத்தில் என்று சொன்னால், அது தமிழ்நாடு என்ற முதல்நிலையை எட்டியிருக்கிறது. பல பல்கலைக்கழகங்களை கண்ட தலைவர், இந்த அரசும், இந்த ஆட்சியும். மாநில உரிமைகள் என்று சொன்னால், அதில் அகில இந்திய முகம், திராவிட முன்னேற்றக் கழகமும், நம்முடைய முதல்வர் அவர்களும்தான்.

2026, 2026 என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆட்டு மந்தையில் ஆயிரம் ஆடுகள் உலவும், மேயும், வாழும்; இரை தேடி அலையும், புல் தேடி அலையும்; மாலை நேரத்தில் ஆட்டுக் குட்டிக்கு பசி எடுத்தால் ஆயிரம் ஆடுகள் ஆட்டு மந்தையில் இருந்தாலும், அந்தக் குட்டி தாய் மடியை நாடிதான் செல்லும்.

தன் தாய் ஆட்டின் மடியில் பால் குடிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தறிவு படைத்த ஆட்டுக்குட்டியே தாய் மடியைத் தேடுகிறதென்றால், இந்தத் தமிழ் உலகம், தமிழ்நாட்டின் தாய் மடியாய் இருக்கிற தலைவரே! தமிழக முதல்வரே!! உன்னை நாடாமல், நாங்கள் யாரை நாடுவோம்? யாரைத் தேடுவோம்? இந்த நேரத்தில் எல்லோருக்கும் எல்லாம், அனைவருக்கும் அனைத்து சமவாய்ப்பும் வழங்கவேண்டுமென்று உயர் கல்வியை உயர்த்திச் செல்கிற தலைவர், நம்முடைய திராவிட மாடல் முதல்வர். திராவிட முன்னேற்றக் கழக அரசு அமையும்போதெல்லாம் உயர் கல்வி உச்ச நிலையில் இருக்கும் என்பதற்கு என்னால் பல சான்றுகளை சொல்லிவிட முடியும்.

இரு மொழிக் கொள்கையைக் காத்தது இந்த விடியல் ஆட்சி!

குடிசையில் பிறந்த எளிய தொண்டன்!

ஆனாலும்கூட, வலது புறத்தில் இருப்பவர், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் அருமை அண்ணன், முனைவர் பழனி வேல் தியாக ராஜன் அவர்கள், இறைபக்தி உடையவர், மீனாட்சி அம்மனைத் தொழுபவர், அவருடைய தாயார், அக்கோயில் அறங்காவலர் குழுவின் தலைவர், தமிழகத்தின் முதல் ஜனநாயக முதல் அமைச்சர், திராவிட மாடல் நாயகனுடைய சாதனையைப் பார்த்தீர்களா? தமிழகத்தின் முதல் முதலமைச்சராக இருந்தவரின் வாரிசு வீட்டுப் பிள்ளைக்குப் பக்கத்தில், ஒரு ஓலைக் குடிசையில் பிறந்த எளிய தொண்டன் கோவி. செழியனை உட்கார வைத்து, திராவிட மாடல் அரசு இதுதான் என்று காட்டுகிறாய் என்று சொன்னால், உன் மன நிலை, உன் எண்ணம், உன் உள்ளம், மிக உயர்ந்து, பாராட்டத்தக்கது. என் அண்ணனே, எங்கள் அமைச்சரே, நீங்களும் உங்கள் தாயாரும் மதுரை செல்லுங்கள், மீனாட்சி அம்மனை வணங்குங்கள். வணங்கிவிட்டு, இந்தத் தலைவன் பல்லாண்டு வாழவேண்டுமென்று உங்கள் மீனாட்சியை என்சார்பில் வணங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இடப்புறத்திலிருப்பவர், சுவாமியின் சுவாமி, ஐயப்ப சாமி. (மேசையைத் தட்டும் ஒலி) போன் அடித்தாலே, பள்ளிக் கட்டு சபரிமலைக்கு பாட்டு தான் ஒலிக்கும். அண்ணலே, நீ கேரளாவிற்கு செல்கிறபோது, ஐயப்பனை வணங்குகிறபோது வணங்கு. இந்தத் தலைவன் மேலும் நூறாண்டு வாழ வேண்டுமென வாழ்த்து, வாழ்த்து. வாழ்த்து. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எதிரே அமர்ந்திருக்கிற முன்வரிசைத் தலைவர்களில், பகுத்தறிவாதி எனச் சொல்லுவார், அண்ணன் பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன், எ.வ. வேலு அவர்கள். அண்ணன் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே, கடவுளை வணங்காமல் இயற்கையை வணங்குகிற உங்களைச் சொல்வேன், இயற்கையை வணங்குங்கள், வானம் போல் எங்கள் தலைவன் பல்லாண்டு வாழ வேண்டுமென வாழ்த்துங்கள் என்பது தான், ஒட்டுமொத்த எல்லோருடைய கோரிக்கையும், இந்த நாட்டின் எதிர்பார்ப்பும்.

சீனப் பெருஞ்சுவர்போல், Pyramid போல், Pisa கோபுரம் போல், புகழ்பெற்ற தலைவனாக இந்தத் தலைவர் பல்லாண்டு வாழ வேண்டும், வாழ வேண்டும், இந்த நாட்டை வாழ்விக்க வேண்டும்.

தேர்தல் நேரத்தில் சொன்னோம், "ஸ்டாலின் தான் வராரு, விடியல் தரப்போராரு" தமிழகமெங்கும் ஒலித்த பாடல். ஒற்றை வரிப் பாடலில் ஆட்சி மாற்றத்தை உருவாக்க முடியும் என்று காட்டிய அற்புதத் தலைவனே, எங்கள் முதல்வரே, அந்தப் பாடலை மீண்டும் நாடு எதிரொலிக்கக் காத்திருக்கிறது.

'ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு ஆளுநரும் எதற்கு' என்ற அண்ணாவின் பொன்மொழியை, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்மூலம் நிரூபணம் செய்த ஆட்சி, இந்த விடியல் ஆட்சி. மாந்தர் குலத்தைக் காக்கும் முதல்வர் பல்கலைக் கழகத்தின் வேந்தராக்கியது, இந்த விடியல் ஆட்சி.

தடைகளைக் கடந்து, மாணவர்கள் தலை நிமிர வழிவகுக்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம் தந்தது, இந்த விடியல் ஆட்சி. நாடுயர மாணவர்கள்மூலம் நான் முதல்வன் திட்டத்தைத் தந்தது, இந்த விடியல் ஆட்சி. பெண்ணுக்கு சொத்துரிமை பிறப்புக்கும் மண்ணுரிமை தந்தது, இந்த விடியல் ஆட்சி. இடரும் ஆதிக்கத்தை எட்டி உதைத்து, இருமொழிக் கொள்கையைக் காத்தது, இந்த விடியல் ஆட்சி. இந்தித் திணிப்பின் விளா எலும்பின் சந்தியை முறித்துப்போட்டு, தமிழே அலுவல் மொழி என சரித்திரம் எழுதியது, இந்த விடியல் ஆட்சி. ஒரே மொழி, ஒரே தேசம் எனும் முழங்கியவர்களை ஓட ஓட விரட்டியது, இந்த விடியல் ஆட்சி. கணினி பூங்காங்களும், கல்வி மாடங்களும் நாடெங்கிலும் நிறுவியது, இந்த விடியல் ஆட்சி. பஞ்சமர் கனவை நனவாக்கியதும், பஞ்சமி நிலங்களை மீட்டதும், இந்த விடியல் ஆட்சி. போக்குவரத்துத் துறையில், வெற்றி மகுடம் பெற்றிருப்பதும், இந்த விடியல் ஆட்சி.

மாமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்குரிய வழிவகையை, முதலமைச்சர் அவர்களிடம் பெற்று, உரிய முறையில் அவற்றிற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை, இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல நேரங்களில் இந்தச் சபையில், 2011, 2016 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் ஒரே தொகுதியில் மூன்று முறை இந்த எளியவன் வெற்றி பெற்று, இன்றைக்கு இந்தச் சபையில் உங்கள் முன்னால் நின்று நான் பேசிக்கொண்டிருக்கிறேன். அந்த நிலையை உருவாக்கித் தந்த என்னுடைய நினைவில் வாழ்கிற முன்னாள் அமைச்சர் ஐயா கோ.சி. மணி அவர்களுக்கும், எங்கள் அண்ணன் திருப்பனந்தாள் ரவிச்சந்திரன் அவர்களும் மறைந்துவிட்ட காரணத்தினால் அவர்களை நினைவு கூர்கிறேன். எங்களுடைய மாவட்டத்தின் மாநிலங்களவை உறுப்பினர் அண்ணன் சு. கலியாணசுந்தரம் எம்.பி. அவர்களுக்கும், முன்னாள் நாடளுமன்ற உறுப்பினர் சே. ராமலிங்கம் அவர்களுக்கும், தஞ்சை மாவட்டத்தில் மாவட்டப் பணிகள் சிறப்பாக நடக்க எனக்கு நாடி நரம்பாக, இணைப்பாக இருந்து ஒத்துழைப்பு தருகிற, நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் திருவையாறு தொகுதி அண்ணன் துரை. சந்திரசேகரன் அவர்களுக்கும், கும்பகோணம் தொகுதி க.அன்பழகன் அவர்களுக்கும், பட்டுக்கோட்டை தொகுதி, க. அண்ணாதுரை அவர்களுக்கும், பேராவூரணி தொகுதி அண்ணன் அசோக்குமார் அவர்களுக்கும், தஞ்சாவூர் தொகுதி டி.கே.ஜி. நீலமேகம் அவர்களுக்கும், பாபநாசம் தொகுதி, முதல் வரிசைத் தலைவர் பேராசிரியர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்களவை உறுப்பினர் அண்ணன், தஞ்சை முரசொலி எம்.பி. அவர்களுக்கும், மக்களவை உறுப்பினர் மயிலாடுதுறை செல்வி சுதா அவர்களுக்கும், மாநிலங்களவை உறுப்பினர் சண்முகம் அவர்களுக்கும், முன்னாள் மத்திய அமைச்சர் S.S. பழனி மாணிக்கம் அவர்களுக்கும், எனது தொகுதியில் இந்த எளியவனின் வெற்றிக்கு அயராது உழைத்த ஒன்றிய கழகத்தின் செயலாளர்கள். வாய்ப்பு இதுதான் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஒன்றிய கழகத்தின் செயலாளர்கள். அண்ணன் கோ.க. அண்ணாதுரை, கோவூர். சி. அம்பிகாபதி, மிசா மனோகரன், உள்ளூர் கணேசன், உதயா ரவிச்சந்திரன், கோவிலச்சேரி சுதாகர் ஆகியோருக்கும், பேரூராட்சி மன்றத்தின் செயலாளர்கள், திருபுவனம் ஆச்சி, திருவிடைமருதூர் சுந்திர ஜெயபால், ஆடுதுரை கோ.சி. இளங்கோ, வேப்பத்தூர் மகாலிங்கம், திருப்பனந்தாள் சப்பானி ஆகியோருக்கும், ஒன்றிய பெருந்தலைவர்கள் திருமதி சுபா திருநாவுக்கரசு, திருமதி தேவி ரவிச்சந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கும், 103 ஊராட்சி கழக பொறுப்பாளர்களுக்கும், 844 கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகளுக்கும், சார்பணியினருக்கும் என்னுடைய வெற்றிக்கு உழைத்த காரணத்தினால் இந்தநேரத்தில் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கிறேன்.

மாமன்ற உறுப்பினர்களுடைய கருத்துகளை ஏற்று, இந்த அரசு எவ்வளவு பணிகளைச் செய்து முடிக்க முடியுமோ, அவ்வளவு பணிகளையும் செய்துமுடிக்கும் என்று இந்தநேரத்தில் எடுத்துச்சொல்லி, மாமன்ற உறுப்பினர்களுடைய வெட்டு தீர்மானத்தைத் திரும்பப் பெற்று, என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையை நான் செம்மையாக நடத்துவதற்கும், சிறப்பாக செயல்படவும் இந்த நிதி நிலை அறிக்கையில் மானியக் கோரிக்கையில் அனைத்து விவரங்களையும் அள்ளி வழங்கி எனக்கு துணைநிற்கிற தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், I.A.S. அவர்களுக்கும், நிதித் துறை முதன்மைச் செயலாளர் T. உதயச்சந்திரன், I.A.S. அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அவர்களின் செயலாளர் M.S. சண்முகம், I.A.S. அவர்களுக்கும், உயர் கல்வித் துறை செயலாளர் C. சமயமூர்த்தி I.A.S. அவர்களுக்கும், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி E. சுந்தவல்லி I.A.S. அவர்களுக்கும், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி. ஜெ. இன்னசன்ட் திவ்யா I.A.S. அவர்களுக்கும், தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையர் ஹர்சகாய் மீனா, I.A.S. அவர்களுக்கும், அறிவியல் நகரம் துணைத் தலைவர் தேவராஜ் தேவ் அவர்களுக்கும், தமிழ்நாடு மாநில உரிமை மன்றத்தினுடைய துணைத் தலைவர் மூத்த I.A.S. அதிகாரி M.P. விஜயகுமார் I.A.S. அவர்களுக்கும், தேசிய உயர்கல்வி செயலாக்கத் திட்டம் RUSA (Rashtriya Uchchatar Shiksha Abhiyan) மாநில திட்ட இயக்குநர் டாக்டர் S. ஸ்வர்ணா அவர்களுக்கும், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத் தலைவர் சா. வின்சன்ட் அவர்களுக்கும், தமிழ்நாடு அறிவியல் ஆணையத் தொழில்நுட்பத்தினுடைய செயல் இயக்குநர் லெனின் தமிழ்வேலன் அவர்களுக்கும் என்னை வாக்களித்து, வெற்றி பெற வைத்த எனது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் வாக்களிக்காத பொதுமக்களுக்கும் இந்த நேரத்தில் நன்றி சொல்லி, இவ்வளவு நேரம் அனுமதித்த பேரவைத் தலைவர் அவர்களே, உங்களையும் வணங்கி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பதிலுரை வழங்கினார்.